களுக்கு பொருந்துமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். உணர்ச்சி வசத்தால் ஒரு கொலை நடந்து விட்டது என்று சுலபமாகச் சொல்லக்கூடாது என்பதை ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் அடுத்து அடுத்தாற் போல் கூச்சலும், குழப்பங்களும் ஏற்பட்டு சபை நடவடிக்கை பாதிக்கப்பட்டு எனக்குப் பலமுறை பேசக்கூடிய வாய்ப்பை, நேரம் இல்லாத காரணத்தால் மறுக்கப் பட்டது. காரணம். அடிக்கடி கூச்சலும், குழப்பமும் இந்தச் சபையில் தொடர்ந்து நடைபெறுகிறது என்று சொல்கிறபோது அது அவைத் துணைத் தலைவர் அவர்கள் தலைமை ஏற்று நடத்துகிறபோது தான் அதிகமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்போது இரண்டு வாரங்களுக்கு முன்பு துணைச் சபாநாயகர் அவர்கள் இந்த அவையை தலைமை தாங்குகிறபோது தான் பேப்பர் வெயிட் தூக்கி எறியக் கூடிய சம்பவம் நடைபெற்றது. ஆகவே, என்ன காரணத்தாலோ இது செய்யப்பட்டு வருகிறது என்பதை நம்மாலே புரிந்து கொள்ள முடியவில்லை, ஆகவே, இன்றையதினம் இந்த நடவடிக்கையாவது ஏதோ திடீரென்று நடந்து விட்டாதாகக் கருதக் கூடாது. காரணம், இம்மாதிரியான சம்பவங்கள் பேரவையின் மரபையும், கண்ணியத்தையும் பண்பையும் உண்மையாக கட்டிக் காக்கக் கூடிய ஒன்றல்ல. தவிர யாராவது எதிர்க்கட்சியில் இருந்து ஒருவர் பேச முயன்றால் அவர்கள் மீது தாறுமாறான வார்த்தைகளும் இழிவான வார்த்தைகளும் தாராளமாக பரிமாறபடுகின்றன. அப்படி தாக்கப்படும், அச்சுறுத்தப்படும், பயமுறுத்தப்படும் சம்பவங்கள் நிகழ்கின்றன. ஆகவே, எந்த எந்தச் சம்பவங்கள் நாம் நடக்க கூடாது என நினைக்கிறோமோ அந்தச் சம்பவங்கள் எல்லாம் நடக்கின்றன. இதற்கு மேல் என்ன நடக்கும் என்று தெரிய வில்லை. இம்மாதிரியான சம்பவங்கள் எல்லாம் நடக்காமல் முற்றுப்புள்ளி வைப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரையும் பேரவைத் தலைவர் அவர்கள் கலந்து பேசி ஒரு இறுதியான, முடிவை எடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பேசக் கூடிய நிலையில் இன்று நான் இல்லாவிட்டாலும் இன்று இந்தப் பிரச்னை வரும் என்று நான் எதிர்ப்பாக்கவில்லை. வெந்தப் புண்ணில் வேல் என்பார்கள். அதைப்போல நாங்கள் ஆழ்ந்த துயரத்தில் இருக்கிற இந்த நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு தீர்மானம் இங்கே முன்மொழியப்படுகிறது என்று கேள்விப்பட்டு நாங்கள் அவசரமாக வரவேண்டிய நிலை ஏற்பட்டது. இன்று காலை 8-30 மணி அளவில் தங்களோடு நான் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன். தொடர்பு கொண்டபோது இன்று மறைந்த ஆசைத்தம்பி அவர்கள் பற்றிய அனுதாபத் தீர்மானம் வருகிறதா, அதிலே எல்லாக் கட்சித் தலைவர்களும் பேசுகிற நிலை உருவாக்கப்படுகிறதா என்று தங்களிடத்தில் நான்

1979 ஏப்ரல் 9] [திரு. மு. கருணாநிதி]

விளக்கம் கோரினேன். நான் அப்படித்தான் எதிர்பார்த்தேன். ஒரு முக்கியமான, சுயமரியாதை வீரர், சமூகத் தொண்டர், தமிழ்நாடு பொது வாழ்வில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களோடு கலந்துபணியாற்றியஒருவர்மறைந்துவிட்ட நேரத்தில் எல்லாக் கட்சித் தலைவர்களும் பேசக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படுமா என்று தங்களிடம் கேட்டேன். ஆனால் தாங்கள் இன்று இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்து படித்துவிட்டு, மௌனம் கடைபிடித்து, மீண்டும் சபை தொடர இருக்கிறது என்று அறிவித்து விட்டீர்கள். அதன் பிறகு இந்த தீர்மானம் வருவது பற்றியும் நம் இருவரிடையே உரையாடல் நடைபெற்றது தொலைபேசி வாயிலாக. அப்போது தாங்கள் என்னிடத்தில் குறிப்பிட்டீர்கள். ஏற்கனவே எதிர் கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களும் மற்றுமுள்ள கட்சித் தலைவர்களும் பேரவைத் துணைத்தலைவரவர்களோடும் மாண்புமிகு மின்வாரியத்துறை அமைச்சர் அவர்களும் முன்னவர் அவர்களோடும் கலந்து பேசியதாகவும் இன்றும் கேள்வி நேரத்தில் நான் முன்கூட்டியே வந்துவிட்டால் அவை முன்னவர் அவர்களோடு பேச ஒரு வாய்ப்பு ஏற்படும். முடிவு எடுக்க தோதாக இருக்கும் என்றும் அறிவித்தீர்கள். நான் நீங்களும் இருக்க வேண்டுமே என்று தங்களை கேட்டுக்கொண்டேன். தாங்கள் சொன்னீர்கள், துணை சபாநாயகர் இன்று வர நேரமாகும். நான் தான் கேள்வி நேரத்தை நடத்த வேண்டியவனாக இருக்கிறேன். எனவே நீங்கள் கேள்வி நேரம் நடக்கிறபோதே வந்து விடுங்கள் அவை முன்னவர் அவர்களோடு அவரது அறையிலோ சபா நாயகர் அவர்களுடைய அறையிலோ நீங்கள் பேசலாம். எப்படி இந்தத் தீர்மானத்தை கொண்டு வாலாம், இந்த மன்றத்தினுடைய மரபுக்களை எப்படிச் செம்மைப்படுத்தலாம். எப்படி வழிவகுக்கலாம் என்பதை அறிவித்தீர்கள்.

அதை எதிர்பார்த்து இங்கு கேள்வி நேரம் 10 மணி வரை நடைபெறும், அதற்குள் போய்விடலாம் என்று நினைந்து 9-35க் குப் புறப்பட்டு, 9-40க்கெல்லாம் இங்கு வந்து சேர்ந்தேன், இங்கு வந்தால். திடீரென்று கேள்வி நேரம் 10 மணி வரை நடைபெறுவதற்குப் பதிலாக கால் மணி நேரம் முன்பாகவே முடிந்தவிட்டதால், அவை முன்னவர் அவர்களோடு கலந்து பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இப்போது இந்தத் தீர்மானம் இங்கு முன்மொழியப்பட்டு, எதிர்கட்சித் தலைவர்களும், எதிர்கட்சித் துணைத்தலைவர் பேராசிரியர் அவர்கள் இவர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தியாவில் பல மாநில சட்டமன்றகளிலும், பாராளுமன்றத் திலும், மாநிலங்கள் அவையிலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகள் எல்லாம் வழி

[திரு. மு. கருணாநிதி] [1979 ஏப்ரல் 9

காட்டிகளாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்று கருதுபவனும் அல்ல விரும்புபவனும் அல்ல. தூண்டிவிடக்கூடியவனும் அல்ல என்பதை மாண்புமிகு முன்னவர் அவர்களும், தாங்களும் என்பால் நம்பிக்கைக் கொண்டவர்களும் நிச்சயமாக உணருவார்கள் என்று நம்புகிறேன். அண்மையில் கூட மாநிலங்கள் அவையில் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கல்பனாத் ராய் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான் கான் எதைத் தூக்கிக் காண்பித்தார் என்று கண்டிக்கப்படுகிறாரோ அதே கருவியைத் தூக்கி கல்பனாத் ராய் காண்பித்தார் என்று செய்தி வந்திருக்கிறது. அதற்காக யாரும் மன்னிப்பு கேட்டுக் கொண்டதாகவோ, இதற்காக ராஜ்ய சபாவில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது தான் எனக்கு கிடைத்த தகவல், எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல் காரணங்கள் எதுவாக இருந்தாலும் தாங்கள் கண்டிப்பதற்கோ கொஞ்சம் வேகமாக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கோ உரிய காரணங்கள் இருந்தாலும் நடைபெற்ற செயல்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை என்று நான் சொல்ல மாட்டேன். நான் அன்றையதினம் உடல் நலக்குறைவு காரணமாக வீட்டில் இருந்தேன். எனக்கு இது தொலை பேசி மூலமாக தெரிவிக்கப்பட்டதும், பேராசிரியர் அவர்களோடு தொடர்பு கொண்டபோது, என்னிடத்தில் இதற்காக வருத்தம் தெரிவித்து மன்னிப்பும் கேட்டுக்கொண்டதாக குறிப்பிட்டார்கள். வருத்தம் தெரிவித்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்கள் என்பதற்கு பின்னால் இந்தப் பிரச்னை வரும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. சம்பந்தப்பட்ட உறுப்பினர்களை அழைத்து அவர்களிடத்தில் என்னுடைய கண்டனங்களை தெரிவித்தேன். அப்படி நடக்கக்கூடாது என்றும் சொன்னேன்.

ஆனால் ஆளும்கட்சி தரப்பிலிருந்து என்ன சொன்னார்கள் என்பதை முன்னவர் அவர்கள் சொல்லவில்லை. பத்திரிகைகள் எதிலும் ஆளும் கட்சியினரைப் பற்றி எதுவும் வரவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் வந்திருக்கிறது.

> "A.D.M.K. member was heard remarking that it was not worse than the lifting of the dhoti by a ruling party member."

என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது, இந்தச் செய்தி இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையிலும் வடக்கே வெளியிடப்பட்டிருப்பதாக அறிகிறேன். ஆளும் கட்சி சார்பில் ஆத்திரமான சொற்கள் பேசப்பட்டன. ஆளும்கட்சியிலிருப்பவர்கள் அன்றைக்கும் அந்த அளவுக்கு மரியாதை குறைவான முறைகேடான சூழ்நிலையை உருவாக்கினார்கள். அதற்காக எதிர்கட்சிகளும் உருவாக்கவேண்டும் என்றோ அல்லது எதிர்கட்சிகள் உருவாக்கினால் அதற்காக ஆளும் கட்சியிலிருப்பவர்கள் உருவாக்க வேண்டும் என்றோ முதலமைச்சர் அவர்களோ அல்லது முன்னவர் அவர்களோ விரும்பமாட்டார்கள்.

1979 ஏப்ரல் 9] [திரு. மு. கருணாநிதி]

[முற்பகல் 10.30]

எல்லோரும் சேர்ந்து ஆளும் கட்சி, எதிர்க் கட்சி, மற்றுமுள்ள எதிர்க் கட்சிகள், தோழமைக்கட்சிகள் அனைத்தும் சேர்ந்து இந்த மன்றத்தின் மரபைக் காப்பாற்ற வேண்டுமென்பதில் நான் கிஞ்சித்தும் வித்தியாசப்பட்டவன் அல்ல என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி மீண்டும் இதைப் பற்றி பேசுவோம் என்ற நிலை வந்த பிறகு, இப்படி அவசரப்பட்டு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவது தேவையில்லை என்பதைத் தாங்களும், அவை முன்னவர் அவர்களும் அறிந்ததே. எனவே, இத்தகைய தீர்மானம் கொண்டு வந்ததைப் பற்றி யோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு நாளைக்கு ஒருவிதமாக நிலைமை உருவாகிறது. என்னுடைய நண்பர் கூத்தகுடி சண்முகம் அவர்கள் என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும். இதைக் குற்றம் சாட்டுவதற்காகக் கூறவில்லை. ஒருநாள் அவர்கள் இந்த அவையிலே, ஒரு குறிப்பைப் படித்துக் காட்டி, இது ஆங்கிலத்திலே இருக்கின்றது என்ற காரணத்தினால், இதைக் கிழித்து எறிந்துவிட்டுப் போனார். அந்தச் செய்தி பத்திரிகையிலே வந்தது. அதைப் போலவே இன்னொரு நாள், எங்கள் கட்சி கொறடா கிட்டப்பா அவர்கள் ஒரு குறிப்பைப் படித்துக் காட்டி, அதைக் கிழித்து எறிந்துவிட்டுப் போனார். அப்படி கேள்வித் தாளை கிழித்து எறிந்துவிட்டுப் போனார். அது பத்திரிகையிலே வரக்கூடாது என்று அவைத் தலைவர் அவர்கள் ஆணையிட்டார்கள். இப்படிப் பல நிகழ்ச்சிகள் மாறுபட்டு, முரண்பட்டு அமைந்து விடுகின்றது.

பாயின்ட் ஆர் ஆர்டர் என்று கேட்பது, ஒரு ஒழுங்குப் பிரச்னை என்று கேட்பது, அவைத் தலைவர் அவர்களின் அனுமதியைப் பெற்றுத் தான் கேட்கவேண்டும் என்றிருந்தாலும், அப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டவுடன், என்ன என்பதைப் பற்றிக் கேட்டு, இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள் என்று தெரிவிப்பது அல்லது அடியோடு இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லி, அதை அவைக் குறிப்பிலே இருந்து எடுத்து விடுங்கள் என்று சொல்வது ஏற்கனவே இந்த அவையிலே கடைபிடிக்கப்பட்டு வந்த மரபாக இருந்து வந்திருக்கிறது. அதை அவைத் தலைவர் அவர்களோ, துணைத் தலைவர் அவர்களோ, பெயரைச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை—முனு ஆதி அவர்களையோ அல்லது திருநாவுக்கரசு அவர்களையோ பார்த்து எந்த ஒரு உறுப்பினரும் இழித்துப் பேசுகிறார்கள் என்று அர்த்தம் அல்ல. அங்கிருக்கக் கூடிய புனிதமான நாற்காலியைப் பார்த்துப் பேசுகிறார்கள் என்று தான் நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். எனவே, எந்தக்

கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்தாலும், உள்ளபடியே பொறுத்துக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல கண்டனத்திற்குரிய ஒன்று, இனி மேல் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நிகழாமல் இருக்க. புரையோடி விட்ட சில பிழைகளைப் பற்றி, விஷயங்களைப் பற்றி நாம் எண்ணிப் பார்த்து விவாதிப்பதற்கு அலுவல் ஆய்வுக் குழுவில் இதைப் பற்றிப் பேசுவதற்குரிய வாய்ப்பை அவை முன்னவர் அவர்கள் அளிப்பார்களானால் நலமாக இருக்கும். அவர்கள் கூறினார்கள், இந்த மரபைக் காப்பாற்றுவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று. நிச்சயமாக ஒத்துழைப்பு உண்டு என்ற உறுதி மொழியைத் தருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவைக்கு சுருக்கமாக விளக்க வேண்டியவனாக இருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறபோது, தொலைபேசி மூலம் நான் உங்களோடு தொடர்பு கொண்டேன். எல்லாக் கட்சித் தலைவர் களும் பேசுகின்ற வாய்ப்பு இருக்கிறதா என்றும், வருத்தம் தெரிவிக்கின்ற தீர்மானம் கொண்டு வரப்பட இருக்கின்றதா என்றும் கேட்டார்கள். நான் சொன்னேன். சிட்டிங் மெம்பராக இல்லாத காரணத்தால், 'ரெபரென்ஸ்' கொண்டு வரலாம் என்று சொன்னபோது, அப்படியானால் நாங்கள் இன்று சபைக்கு வருவதாக இல்லை என்றார்கள். எல்லாக் கட்சித்தலைவர்களும் பேசுவதற்கு வாய்ப்புத் தாருங்கள் என்று சொல்லியிருந்தால், நான் அதைப் பற்றி யோசித்திருப்பேன்.

பிறகு அவர்கள் பேசுகின்றபோது, இதைப்பற்றிய தீர்மானத்தை இன்றைக்கு கொண்டு வருகிறீர்களே என்று சொன்னார்கள். கொண்டுவந்த நிலைமையை சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். உங்களுக்கு ஏற்படுமானால், சிந்திக்க மாட்டீர்களா? நேரடியாக நான் பாதிக்காவிட்டாலும், ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாற்காலியில் யார் உட்கார்ந்திருக்கிறார்கள் என்பது பிரச்னை அல்ல. அதற்கு உரிய மரியாதை கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் பிரச்னை பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்பதற்கு உரிமை உண்டு. ஆனால், அன்று பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், பிரச்னையை எடுத்துக் கொண்டுவிட்டபடியால், பிறகு அனுமதி தருகிறேன் என்று வாக்குறுதி தந்த பிறகும், நான் பிடிவாதமாக பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பித் தான் தீருவேன் என்ற நிகழ்ச்சி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் காலத்திலும் நடந்ததில்லை.

அதுமட்டுமல்ல. இவ்வளவு பீடிகையாக சில கருத்துக்களைச் சொல்லும்போது நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் சொல்லத் தயாராக இல்லை. 'நீ என்னய்யா தலைவன்? போய்யா, என்றெல்லாம் பேரவைத் தலைவரைப் பார்த்துக் கூறியிருக்கிறார் கள். இன்னும் பல கெட்ட வார்த்தைகளை எல்லாம் பயன்